இந்திய [illegible] சட்டம்

இ

# இந்திய முதற் சட்டம்

( நாட்டின் தேவைக்கேற்ற நாடகம் )

அ. மு. பரமசிவானந்தம், B.O.L., M.Litt.
தமிழ்த் துணைப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

~~வசந்தம்~~ பதிப்பகம்
~~23-A, அருணாசல ஆச்சாரி தெரு,~~
~~திருவல்லிக்கேணி, சென்னை~~

உரிமைப் பதிப்பு] 1950 [விலை ரூ. ~~2-8-0.~~ 3.00

# நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| பொன்னப்பன் | .... | *கதைத் தலைவன்.* |
| எழிலரசி | .... | *கதைத் தலைவி.* |
| மாயாண்டி முதலியார் | .... | *எழிலரசியின் தந்தை.* |
| நல்லண்ணன் | .... | *எழிலரசியின் அண்ணன்.* |
| கருணைஒளி, செல்வன், நெடுங்கிள்ளி | .... | *நல்லண்ணன் நண்பர்கள்.* |
| வடிவேலு | .... | *ஒரு ஆகஸ்டு தியாகி.* |
| செழியன் | .... | *சீர்திருத்த இளைஞன். மாயாண்டியிடம் சிலநாள் பணியாளாக இருந்தவன்.* |
| பொன்னி, தங்கம், செந்தாமரை | .... | *கிராமப் பெண்கள்.* |
| சடலையாண்டி | .... | *கிராமப் பெரியவர்.* |
| கருப்பன் | .... | *வேலைக்காரன்.* |

*கணக்கப் பிள்ளை, கிராம மக்கள், பூசாரி, போலீஸ் அதிகாரிகள், ஜெயில் அதிகாரிகள், நீதிபதி, கவர்னர் முதலியோர்.*

## சென்னை அரசாங்கப் பொதுப்பணி அமைச்சர்
## உயர் திரு. மீ. பக்தவத்ஸலம் அவர்களது

# அணிந்துரை

*வித்வான் பரமசிவானந்தம் தமிழ் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர். எனவே, அவர் தொகுக்கும் நூல்களுக்கு முகவுரை தேவையில்லை. ஆனால் அவர் வரைந்த 'இந்திய முதற் சட்டம்' என்ற நூல் நம் விசேஷ பாராட்டுதலுக்குரியது. இது ஒரு நாடக ரூபமான நூல். எதிர்காலக் கிராம எழுச்சியைச் சித்தரிப்பதாகும். நம் குடியாட்சியில் கிராமத் தொண்டைச் சட்ட பூர்வமாக அமைக்கும் ஒரு கற்பனைக் கதை இந் நாடகத்தில் அமைந்திருக்கிறது.*

*கிராம முன்னேற்றமின்றி நம் நாடு உயர்நிலை அடையாது என்பது யாவரும் உணர்ந்து ஒப்புக் கொள்ளும் விஷயம். ஆனால் அதைச் சாதிப்பதில் கவனம் செலுத்தி வழி தேட வேண்டும். இத் தொண்டில்தான் ஆசிரியர் ஈடுபடுகிறார். கிராமத் தொண்டின் அவசியத்தை நிர்ப்பந்தமாகவே வற்புறுத்த வேண்டுமென்பதை இந் நூலில் எடுத்துக் காட்டுகிறார். நிர்ப்பந்தமே ருசியை உண்டாக்குமென்பது ஆசிரியரின் கோட்பாடு. கிராமச் சீர்திருத்த வேலையே குடியரசு கவனம் செலுத்த வேண்டிய முதல் விஷயம் என்பதைத் தம் நூலின் பெயரினால் ஆசிரியர் விளக்குகிறார்.*

நடையும், கருத்தும் ஒன்று சேர்ந்து, நாடகம் வாசகர்களுக்கு, கதையில் ருசியை அமைத்து, பின்னால் கருத்தில் மனதை இழுக்கக் கூடியதாக இருக்கிறது. குடியரசு பெற்ற நாட்டை நிர்மாணிக்கும் சிந்தனையில் ஆழ்ந்திருப்பவர்களுக்கும், குடியாட்சி உரிமை பெற்றும் நாட்டின் நிலைமை மாறாதது கண்டு ஏங்குபவர்களுக்கும் இந் நூல் நல்ல சிந்தனைகளைக் கிளப்பக் கூடியதாக இருக்குமென்று நம்புகிறேன்.

ஆசிரியருக்கு என் வாழ்த்து.

அடையாறு,
30—4—1950.

எம். பக்தவத்ஸலம்.

# முன்னுரை

அரசியல் விடுதலை பெற்ற இந்திய நாடு இன்னும் எத்தனையோ வகையில் விடுதலை பெற வேண்டியுள்ளது. அவற்றுள் இன்றியமையாது உடன் வேண்டப் படுவது பொருளாதார விடுதலை. மக்கள் பொருளாதார ஏற்றத் தாழ்வு இன்றி வாழத் தொடங்கினார்களாயின், அன்று முதல் பிற ஏற்றத் தாழ்வுகளெல்லாம் தாமாகவே அகலும்.

பொருளாதார விடுதலை விழையின், நாட்டின் உயிர்நாடிகளாகிய கிராமங்களைத் தான் முதலில் காணவேண்டும். ஆண்டு முழுவதும் அல்லலில் பாடுபட்டு, நாட்டுக்குப் பயனளிக்கும் அந்த ஏழை விவசாயி முன்னேறினால்தான் உண்மையில் நாடு விடுதலை பெற்றதாகும்.

இக் கிராம முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டே இந் நாடகம் எழுதப்பட்டது. உரிமை ஆட்சி மலர்ந்த வேளையில்—நம்மை நாமே ஆளும் நிலையில்—நம் கிராமங்கள் வளமும் வாழ்வும் பெறவேண்டும் என்ற கருத்தை வற்புறுத்தியே நாடகப் போக்கு அமைந்துள்ளது. அரசாங்கமும், தொண்டரும், நாட்டு மக்களும் ஒன்றிய கருத்தில் உழைப்பார்களானால் நாடு ஒரு சில ஆண்டுகளில் பொருளாதாரம், சமூகம் ஆகிய எல்லாத் துறைகளிலும் முன்னேறி, மக்கள் வாழ்வு இன்பில் மலர வழி பிறக்கும் என்பதைக் காட்ட எழுந்ததே இந் நூல்.

இந் நூலுக்கு அணிந்துரை தந்து சிறப்பித்த சென்னை மாநிலப் பொதுப்பணி அமைச்சர் திரு. மீ. பக்தவத்சலம் அவர்களுக்கு என் நன்றியறிதலான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந் நூலை அழகிய முறையில் பதிப்பித்து, வெளிக் கொணர்ந்த வசந்தம் பதிப்பகத்தார்க்கு என் வணக்கம்.

**அ. மு. ப.**